நாஹர் பப்ளிக் மேனிலைப்பள்ளி **(CBSE )** விழுப்புரம்
இரண்டம் பருவத் தேர்வு - **( 2022-2023)**

வகுப்பு: ஆறு மதிப்பெண்: **50**
பாடம்: தமிழ் மூன்றாம் மொழி நாள் : **01.03.2023**
ஆசிரியர் பெயர் : வே.இராணி காலம் : **1:30** மணி நேரம்

---

**I.**கீழுள்ள பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க **(5×1=5)**

பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பறக்கின்றன. அவை பெருங்கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன. பறவைகள் இடம் பெயர்களை வலசை போதல் என்பர். கடலையும் தாண்டி 4000கிலோ மீட்டர் வரை பறக்கும் பறவை கப்பல் பறவை ஆகும். தமிழகத்திற்கு வெளிநாட்டுப்பறவைகள் வருவது பற்றி இலக்கியங்களிலும் செய்திகள் உள்ளன. 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சத்திமுத்தப்புலவர் " நாராய் நாராய் செங்கால் நாராய் " என்னும் பாடலை எழுதியுள்ளார். அப்பாடலில் பறவைகள் வலசை வந்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதையஆய்விலும் உறுதிப்படுத்தப்பட்டுஉள்ளது.வெளிநாட்டுப் பறவைகளுக்குபுகலிடமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

வினாக்கள்:

1.பறவைகள் இடம் பெயர்தலை _______ என்பர்
(அ) வளம்வருதல் (ஆ) வலசை போதல் ( இ) பயணம்

2. "நாராய் நாராய் செங்கால் நாராய் " என்னும் பாடலை _________எழுதியுள்ளார்.
(அ) நல்லாதனார் (ஆ) காரியாசான் ( இ) சத்திமுத்தப்புலவர்

3. செங்கால் நாரைகள் _______ நாட்டிலிருந்து தமிழகம் வருகின்றன
(அ) ஆப்ரிக்கா (ஆ) ஆஸ்திரேலியா (இ) ஐரோப்பா

4. கப்பல் பறவை ______ கிலோ மீட்டர் வரை பறக்கும்.
( அ) 1500 (ஆ) 4000 (இ) 2050

5. வெளிநாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாக ________ நாடு திகழ்கிறது
(அ) கேரளா (ஆ) ஆந்திரா (இ) தமிழ்நாடு

**II.** கீழுள்ள பாடலைப் படித்துப்பார்த்துக் கேட்கப்பட்ட வினாக்களுக் விடையளி **( 5×1=5)**

"மன்னனும் மாசற கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு "

வினாக்கள்

**1.**இப்பாடலின் ஆசிரியர் ——---
(அ) கபிலர் (ஆ) ஔவையார் (இ) கம்பர்

2. இப்பாடல் ——--- நூலில் இடம் பெற்றுள்ளது
(அ) நல்வழி (ஆ) நாலடியார் (இ) மூதுரை

3. இந்நூலில் ——--- பாடல்கள் உள்ளன
(அ) முப்பது (ஆ) முப்பத்தொரு (இ) முப்பத்து மூன்று

4. ——--- என்ற நூலையும் இயற்றியுள்ளார்
(அ) கொன்றை வேந்தன் (ஆ) குறுந்தொகை (இ) பழமொழி நானூறு

5. தேசம் என்பதன் பொருள் ——-
(அ) வீடு (ஆ) நாடு (இ) பூங்கா

**III.** பொருள் தருக **(5×1=5)**

1. மாசற 2. நட்டல் 3. ஔடதம் 4. தேசம் 5. இயன்றவரை

**IV .**சரியான விடையைத் தேர்வு செய்க **(5×1=5)**

1.நண்பர்களுடன் ______ விளையாடு
(அ) ஒருமித்து (ஆ) மாறுபட்டு (இ) விலகி

2. மாணவர்கள் நூல்களை ____ கற்க வேண்டும்
(அ) மாசற (ஆ) மாசுற (இ) மயக்கமற

3. பிறரிடம் நான் ____ பேசுவேன்
(அ) கடுஞ்சொல் (ஆ) இன்சொல் (இ) கொடுஞ்சொல்

4. மனிதன் எப்போதும் உண்மையையே ____
(அ) உரைக்கின்றான் (ஆ) உறைக்கின்றான் (இ) உழைகிறான்

5. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல்
(அ) பெரிது (ஆ) வறிது (இ) அரிது

**V.**நிரப்புக **(4×1=4)**

1.சோபியா ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு ——--
2. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ——---
3. காமராசரைக் " கல்விக் கண் திறந்தவர் " என மனதாரப் பாராட்டியவர் ____
4. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க ____ அறிமுகப்படுத்தினார்

**VI.** பொருத்துக **(4×1=4)**

1. உண்மை - விலகு

2. ஐயம் - சோர்வு
3. அணுகு - பொய்மை
4. ஊக்கம் - தெளிவு

**VII.** கற்கண்டுப்பகுதி

சரியான விடையைத் தேர்வு செய்க **(10×1=10)**

1.மொழி முதல் எழுத்துகள் ——--

(அ) 22 (ஆ) 20 (இ) 23

2.மொழி முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் ——--

(அ) 12 (ஆ) 15 (இ) 10

3. சொல்லின் இறுதியில் ——--- மெய்எழுத்துகள் வருவதில்லை

(அ) ஆறு (ஆ) ஏழு (இ) எட்டு

4. மெய்யெழுத்துகள் ———-- மொழியின் இறுதியில் வரும்

(அ) பத்து ( ஆ) பன்னிரண்டு (இ) பதினொன்று

5.மொழிக்கு முதலில் வராத உயிர்மெய் எழுத்துகள் ———--

(அ) எட்டு (ஆ) ஆறு (இ) ஐந்து

6.மொழி இறுதி எழுத்துகள் _____

(அ) 22 (ஆ) 24 (இ) 21

7. மெல்லினத்திற்கான இன எழுத்துகள் இடம்பெறாத சொல் எது?

(அ) கல்வி (ஆ) தம்பி (இ) மஞ்சள்

8. நாவின் நுனி மேல் அண்ணத்தின் மையப்பகுதியை உரசுவதால் ______ பிறக்கிறது.

(அ) றகரம் (ஆ) லகரம் (இ) ணகரம்

9. நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் _____ தோன்றும்

( அ) றகரம் (ஆ) ழகரம் ( இ) லகரம்

10 .நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் _____ பிறக்கிறது

(அ) னகரம் (ஆ) ணகரம் ( இ)நகரம்

**VIII.** விடையளி **(4- மட்டும்)** **(4×3=12)**

1.கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை ?
2. டீப் புளூ மீத்திறன்கணினிபற்றி எழுதுக ?
3. எதை நம்பி வாழக் கூடாது ?
4. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
5. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?